# நவம்பர் – 19 – பொதுக்கால 33ம் ஞாயிறு

## ஆண்டவருக்கு அஞ்சி அவர்வழி நடப்போர் பேறுபெற்றோர். தி.பா.128:1

### முதல் வாசகம்: நீதி மொழிகள்:31:10–13,19– 20,30-31

திறமைவாய்ந்த மனத்திடமுள்ள மனையாளைக் காண்பது மிக மிக அரிது. அவள் பவளத்தைவிடப் பெருமதிப்புள்ளவள். அவளுடைய கணவன் அவளை மனமார நம்புகிறான் அவளால் அவனுக்கு நலமும் வளமும் பெருகும். அவள் தன் வாழ்நாள் முழுவதும் அவனுக்கு நல்லதையே செய்வாள் ஒரு நாளும் தீங்கு நினையாள். கம்பளி, சணல் ஆகிய பொருள்களைத் தானே தேடிக் கொணர்வாள் தன் வேலையனைத்தையும் விருப்புடன் தானே செய்வாள். இராட்டினத்தைத் தானே பிடித்து வேலை செய்வாள் நூல் இழைகளைத் தன் விரல்களால் திரிப்பாள். எளியவனுக்கு உதவி செய்யத் தன் கையை நீட்டுவாள். வறியவனுக்கு வயிறார உணவளிப்பாள். எழில் ஏமாற்றும், அழகு அற்றுப் போகும் ஆண்டவரிடம் அச்சம் கொண்டுள்ள பெண்ணே புகழத்தக்கவள். அவளுடைய செயல்களின் நற்பயனை எண்ணி அவளை வாழ்த்துங்கள் அவளது உழைப்பை மக்கள் மன்றம் பாராட்டு வதாக.

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழி நடப்போர் பேறபெற்றோர்

### இரண்டாம் வாசகம் : 1 தெசலோனி 5 : 1 - 6

சகோதர சகோதரிகளே! இவை நடக்கும் காலங்களையும் நேரங்களையும் குறித்து உங்களுக்கு எழுதத் தேவையில்லை. ஏனெனில் திருடன் இரவில் வருவதுபோல, ஆண்டவருடைய நாள் வரும் என்பதை நீங்களே திண்ணமாய்த் தெரிந்திருக்கிறீர்கள். "எங்கும் அமைதி, ஆபத்து இல்லை" என்று மக்கள் கூறிக்கொண்டிருக்கும் பொழுது, கருவுற்றிருப்பவருக்கு வேதனை வருவதுபோல, திடீரென அவர்களுக்கு அழிவு வரும் யாரும் தப்பித்துக் கொள்ள இயலாது. ஆனால், அன்பர்களே! நீங்கள் இருளில் நடப்பவர்களல்ல. ஆகவே அந்த நாள் திருடனைப் போல் உங்களுக்கு வராது. நீங்கள் எல்லாரும் ஒளியைச் சார்ந்தவர்கள் பகலில் நடப்பவர்கள். நாம் இரவையோ இருளையோ சார்ந்தவரல்ல. ஆகவே மற்றவர்களைப்போல் நாமும் உறங்க லாகாது. விழிப்போடும் அறிவுத் தெளிவோடும் இருப்போம்.

### நற்செய்தி : மத்தேயு 25 : 14 - 30

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கி ஓர் உவமை சொன்னார். "விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சி வாயிலாகவும் விளக்கலாம் நெடும் பயணம் செல்லவிருந்த ஒருவர் தம் பணியாளர்களை அழைத்து அவர்களிடம் தம் உடைமைகளை ஒப்படைத்தார். அவரவர் திறமைக்கு ஏற்ப ஒருவருக்கு ஐந்து தாலந்தும் வேறொருவருக்கு இரண்டு தாலந்தும், இன்னொரு வருக்கு ஒரு தாலந்தும் கொடுத்துவிட்டு நெடும் பயணம் மேற்கொண்டார். ஐந்து தாலந்தைப் பெற்றவர் போய் அவற்றைக் கொண்டு வாணிகம் செய்து வேறு ஐந்து தாலந்து ஈட்டினார். அவ்வாறே இரண்டு தாலந்து பெற்றவர் மேலும் இரண்டு தாலந்து ஈட்டினார். ஒரு தாலந்து பெற்றவரோ போய் நிலத்தைத் தோண்டித் தம் தலைவரின் பணத்தைப் புதைத்து வைத்தார். நெடுங் காலத்திற்குப் பின் அந்தப் பணியாளர்களின் தலைவர் வந்து அவர்களிடம் கணக்குக் கேட்டார். ஐந்து தாலந்து பெற்றவர் அவரை அணுகி, வேறு ஐந்து தாலந்தைக் கொண்டு வந்து, "ஐயா, ஐந்து தாலந்தை என்னிடம் ஒப்படைத்தீர் இதோ பாரும், இன்னும் ஐந்து தாலந்தை ஈட்டியுள்ளேன்" என்றார். அதற்கு அவருடைய தலைவர் அவரிடம், "நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே, சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர். எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன். உம் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்கு கொள்ளும்" என்றார். இரண்டு தாலந்து பெற்றவரும் அவரை அணுகி, "ஐயா நீர் என்னிடம் இரண்டு தாலந்து ஒப்படைத்தீர். இதோ பாரும், வேறு இரண்டு தாலந்து ஈட்டியுள்ளேன்" என்றார். அவருடைய தலைவர் அவரிடம், "நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே, சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்குரியவராய் இருந்தீர். எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன். உம் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்கு கொள்ளும்" என்றார். ஒரு தாலந்தைப் பெற்றுக் கொண்டவரும் அவரையணுகி, "ஐயா, நீர் கடின உள்ளத்தினர் நீர் விதைக்காத இடத்திலும் போய் அறுவடை செய்பவர் நீர் தூவாத இடத்திலும் விளைச்சலைச் சேகரிப்பவர் என்பதை அறிவேன். உமக்கு அஞ்சியதால் நான் போய் உம்முடைய தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன். இதோ, பாரும், உம்முடையது" என்றார். அதற்கு அவருடைய தலைவர், "சோம்பேறியே! பொல்லாத பணியாளனே, நான் விதைக்காத இடத்திலும் போய் அறுவடை செய்பவன். நான் தூவாத இடத்திலும் போய் சேகரிப்பவன் என்பது உனக்குத் தெரிந்திருந்தது அல்லவா? அப்படியானால் என் பணத்தை நீ வட்டிக் கடையில் கொடுத்து வைத்திருக்க வேண்டும். நான் வரும்போது எனக்கு வரவேண்டியதை வட்டியோடு திரும்பப் பெற்றிருப்பேன்" என்று கூறினார். "எனவே அந்தத் தாலந்தை அவனிடமிருந்து எடுத்துப் பத்துத் தாலந்து உடைய வரிடம் கொடுங்கள். ஏனெனில் உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும். அவர்கள் நிறைவாகப் பெறுவர். இல்லாதோரி டமிருந்து அவரிடமுள்ளதும் எடுக்கப்படும். பயனற்ற இந்தப் பணியாளைப் புறம்பேயுள்ள இருளில் தள்ளுங்கள். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்" என்று அவர் கூறினார்.

**தியானம்:** பொதுக்காலத்தின் ஞாயிறு வார இறைவார்த்தைகள் மூலமாக இறைமகன் இயேசு தான் விட்டுச் சென்ற பணியினை பொறுப்புடனும், செம்மையாகவும் செயற்படுத்த தனது பணியாளர்களுக்கும் கண்காணிப்பாளர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றார். நாம் ஒவ்வொருவரும் விழிப்போடு இருக்கவேண்டும் என்பதையும் காலத்தை வீணாக்கி, சோம்பல் தனத்திற்கு இடம் கொடுத்து வாழ்ந்தால் நம் வாழ்வை இழப்பது நிச்சயம். மாறாக நமக்கு கொடுக்கப்பட்டுள்ள திறமைகளை முன்மதியோடு பயன்படுத்தி நம்பிக்கையில் மனந்தளராது வாழும் பொழுது இறைவன் இன்னும் தாராளமாக தமது பேரன்பினை( கொடைகளை) பொழியக் காத்திருக்கின்றார் என்ற உண்மைகள் தெளிவாகின்றன. கடவுள் நம் ஒவ்வொருவருக்கும் அவரவர் தகுதிக்கேற்ப தாலந்துகளைத் தந்திருக்கின்றார். கடவுளிடம் இருந்து வராதது நம்மிடம் எதுவுமில்லை. நமது செல்வம், திறமைகள், அமைதியான வாழ்வு மற்றும் நம்மிடம் இருப்பவை அனைத்துமே கடவுளிடம் இருந்து வந்தவை. கடவுள் தந்தவை அனைத்தையும் முறையான வகையில் பயன்படுத்தி அவைகளை நாம் வளர்க்க வேண்டும். முறையாக பயன்படுத்தாத செல்வத்தினால் திறமைகளால் பயன் என்ன? பயனள்ளவர்களாக மனத்துணிவு வேண்டும். அச்சமின்றி செயற்பட வேண்டும். ஒரு தாலந்தைப் பெற்றவர் நிலத்தைத் தோண்டி அதைப் புதைத்து வைத்ததன் காரணம் அச்சமே! கிறிஸ்தவ வசாழ்வின் எதிரி அச்சமே. எனவே நாம் பயனள்ளவர்களாக வாழ அச்சம் அழிக்கப்பட வேண்டும், கடவுள் நமக்குக் கொடுத்தள்ள திறமைகள் அனைத்தையும் அச்சமின்றி விவேகத்துடன் பயன்படுத்தி கொடையாகப் பெற்றீர்கள் கொடையபக வழங்குங்கள்'' (மத். 10:8) என்ற இறைவார்த்தைக்கு அமைவாக நமக்கும், பிறருக்கும் பயனுள்ளவர்களாக வாழ்வோம்.